[1987 மார்ச் 27

(ஆ) கோவை மாவட்டம், கிளியூர், காரமடை பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுதல்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட கிளியூர், காரமடை ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக கட்டிடம் கட்டுவதற்கு பொது மக்கள் நன்கொடை ரூபாய் பத்தாயிரம் செலுத்தியும், தேவையான நிலத்தை ஒப்படைத்தும் பல ஆண்டுகள் ஆன பின்பு சம்பந்தப்பட்ட துறை பணம் ஒதுக்கவில்லை என்று தெரிவித்துள்ளதால், இப்பகுதியில் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

அரசின் கொள்கைப்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குவதற்கு தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கு 5 எக்கர் பரப்பளவுள்ள நிலமும், ரூ. 10,000 நன்கொடையும் பொது மக்களிடமிருந்து அரசுக்கு கிடைக்கப் பெறவேண்டும். 1984—85 ஆம் ஆண்டு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 10 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களுள் கோவை மாவட்டத்தில் இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் சீலியூர் மற்றும் காடிமடை ஆகிய இடங்களில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம் காடிமடை மற்றும் சீலியூர் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக பொது மக்களின் பங்குத் தொகையான ரூபாய் பத்தாயிரம் நன்கொடையாக அரசு கருவூலத்தில் செலுத்தி, சீட்டு எண் 17 மற்றும் 63 வாயிலாக முறையே 26—10—1983, 6—8—1984 நாட்களில் செலுத்தப்பட்டுள்ளது. சீலியூரில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்காக திருவாளர் டி. துரைசாமி கவுண்டர் அவர்களால் வழங்கப்பட இருக்கும் 5.00 ஏக்கர் நிலம் இன்னமும் பொது சுகாதாரத் துறைக்கு தானப் பத்திரம் வாயிலாக பதிவு செய்யப்படாத நிலையில் உள்ளது. இது குறித்து திரு. துரைசாமி கவுண்டர் அவர்களை தனது

1987 மார்ச் 27] [திரு. ப. உ. சண்முகம்]

20—2—1987 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மாவட்ட சுகாதார அலுவலரிடம் மேற்படி நிலம் வழங்கப்படுவதற்கான விதிமுறைகள் கேட்டு அனுப்பியுள்ளதாக மாவட்ட சுகாதார அலுவலர் கோவை அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட சுகாதார அலுவலர் கோவை மேற்படி நபரை நேரில் சந்தித்து விபரங்கள் தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார். புதிய ஆரம்ப சுகாதார நிலையம், காடிமடைக்கு திருமதி மாரியம்மாள் மற்றும் ஆரான் என்ற நபர்களால் 4.77 ஏக்கர் நிலம் வழங்கப்பட உள்ளதாகவும், மேற்படி நிலம் இத்துறைக்கு இன்னமும் பதிவு செய்து கொடுக்கப்படாத நிலையில் உள்ளதாகவும், மாவட்ட சுகாதார அலுவலர், கோவை தெரிவித்துள்ளார். இப்பொருள் குறித்தும் மேற்குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாய் மாவட்ட சுகாதார அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். ஆரம்ப சுகாதார நிலைய இயக்ககத்திலிருந்து மேற்படி இடங்களில் மருந்தகம், அலுவலர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் ஆகியவை கட்டுவதற்கு திட்டம் மற்றும் வரைபடங்களுடன் செயற்குறிப்பு மார்ச் மாதம் 1987-ல் வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற அறிக்கையில் கட்டிடம் கட்டுவதற்கான வரைபடமும், பணம் கட்டியதற்கான குறிப்புகளும் வரப்பெற்றிருக்கின்றன என்று தெரிவித்து இருக்கிறார்கள். எனக்கு எழுத்து மூலம் அளிக்கப்பட்ட பதிலில் பணம் கட்டப்படவில்லை என்றும், இடம் கொடுத்தால் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் வந்த பதிலின் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தேன். இப்போது உரிய பதில் பெறப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, எனக்கு இரண்டு மாதம் கழித்து கொடுக்கப்பட்ட பதிலில், பணம் கட்டப்படவில்லை என்று தெரிவித்து இருந்த காரணத்தினால், இதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு அது காரணமாக இருக்கிறது. ஆகவே, இதைத் தவிர்த்து இந்த ஆண்டு, அந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும்—ஆதிவாசி மக்கள் இருக்கிற பகுதி, அதிகமாக ஆதி திராவிட மக்கள் வசிக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தினால்—கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கம் செய்து இந்த ஆண்டு கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பணம் கட்டியதை அரசு ஏற்றுக் கொண்டது; பணம் கட்டியிருக்கிறார்கள். நிலத்தை ஒப்படைவு செய்வதிலே சில தகராறுகள் இருந்து, நிலத்தை ஒப்படைவு செய்யாத காரணத்தினால்தான் கட்டிடம் கட்டுவதில் காலதாமத மாகிக் கொண்டு வந்திருக்கிறது. இப்போதுதான் நிலத்தை ஒப்படைவு செய்வதற்கு வழிவகைகளைக் கேட்டுக்கொண்டு போயிருக்கிறார்கள். இன்னும் அதுகூடச் செய்து கொடுத்ததாக அரசிற்குத் தகவல் முழுமையாகக் கிடைக்கவில்லை. நிலத்தை ஒப்படைவு செய்யவேண்டும்—இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற 140 ஆரம்ப சுகாதார நிலையங்களை புதியதாக ஆரம்பிக்க இருக்கிறார்கள்—ஆனால், இது கட்டிடம் கட்டுவதைப் பற்றிய பிரச்சினை ஆகும். கட்டிடம் கட்டுவது ஒரு பெரிய பிரச்சினை. இன்னும் பல இடங்களில், இதுபோல் வாடகைக் கட்டிடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்தெந்த இடத்தில் முதலில் வரிசைப் படுத்திக் கட்ட முடியுமோ, அப்படி வரிசைப்படுத்தித்தான் கட்ட முடியும். அவசரப்பட்டு எதையும் செய்வதற்கில்லை.

(முற்பகல் 11-10)

(இ) இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றம் மதுரையில் செயல்படுவதால் ஏற்படும் சிரமம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் ஏ. பாலுச்சாமி, கே. முத்துவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மாவட்ட நீதிமன்றம் இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படாமல், மதுரையி லேயே செயல்பட்டு வருவதால் அப்பகுதி மக்களுக்கு உள்ள சிரமம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.